தமிழ்நாடு அரசு

சுருக்கம்

வேலைவாய்ப்பு - தன்னார்வ பயிலும் வட்டங்கள் ( Study Circles ) 1999-2000 ஆண்டில் 24 மாவட்டங்களில் ஏற்படுத்துதல் புதுத்திட்டங்கள் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ஆர்.2) துறை

அ.ஆ.(நிலை) எண்.106. நாள்.20.7.99

படிக்கப்பட்டது.

இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை.5 எண்.நிவே.7860/99, நாள். 31.3.99.

...

ஆணை:

1999-2000-ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை கோரிக்கை எண்.28-ன் கீழ் விவாதத்திற்கு 30.4.99 அன்று சட்டமன்றப் பேரவையில் பதிலளித்தபோது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் 24 மாவட்டங்களில் வேலை நாடுவோர்களின் 'தன்னார்வ பயிலும் வட்டங்கள்' ( Study Circles ) ஏற்படுத்தப்படும் என்று அறிவிப்பு செய்தார். இதனைத் தொடர்ந்து, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர், இவ்வட்டங்களை ஏற்படுத்த விரிவான குறிப்புகளையும் இதன் காரணமாக எழக்கூடிய செலவினங்களையும் அளித்துள்ளார்கள்.

2. வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கும் இளைஞர்கள் போட்டித் தேர்வுகளில் கலந்துகொண்டு பணி நியமனம் பெறுகின்ற அளவுக்கு தங்களின் திறமைகளை அதிகரித்துக் கொள்ள ஏதுவாக ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் வேலை நாடுவோர்களின் தன்னார்வ பயிலும் வட்டங்கள் ( Study Circles ) ஏற்படுத்தப்படும் என மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் அவர்களால் கோரிக்கை எண்.28ன் கீழ் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை விவாதத்திற்கு பதிலளித்தபோது சட்டமன்ற பேரவையில் அறிவித்தார். வேலைநாடுவோர்கள் தன்னார்வ பயிலும் வட்டங்களில் உறுப்பினர்களாக இணைந்து போட்டித் தேர்வுகளில் கலந்துகொண்டு வெற்றியினைத் தேடிக் கொள்ள ஏதுவாக கூட்டு முயற்சி ( Collective Wisdom ) அடிப்படையில் கருத்துகளை பரிமாறிக் கொள்ள இயலும். இதன் வாயிலாக வேலைநாடுவோர்கள் தங்களது திறமைகளையும் ஆற்றலையும் வளர்த்துக்கொள்ள ஊக்குவிக்கப்படுவர். இத்தன்னார்வ பயிலும் வட்டங்கள் ( Study Circles ) 24 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அமைக்கப்படும் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கு பொறுப்பானவர்கள்.

3. இந்த தன்னார்வ மையங்களை செயல்படுத்துவதற்கு ஆண்டொன்றிற்கு தொடர் செலவினமாக ரூ.14.40 லட்சம் கீழ்க்கண்டவாறு அமையும்.

ஒவ்வொரு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அலுவலகம் அமைப்பு மற்றும் பராமரிப்பு மா

ஒன்றிற்கு.-

| | | |
|---|---|---|
| | | ரூ. |
| 1) போட்டித் தேர்வுகளுக்காக வெளியிடப்படும் நாளிதழ்கள் வார இதழ்கள் வாங்குதல் (பிரதி மாதம்) | : | 1000. |
| 2) போட்டித் தேர்வுகளுக்கான பாடபுத்தகங்கள், சிறப்பு வெளியீடுகள், வருடாந்திர இதழ்கள் வாங்குதல். | : | 750. |
| **தன்னார்வ பயிலும் வட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு அளிப்பதற்காக பாடக்குறிப்புக தயாரிப்பது சிறப்பு வகுப்புகள் நடத்துவது.-** | | |
| 1) பாடக்குறிப்புகள் தயாரிப்பு அச்சடிப்பு. | : | 1200 |
| 2) சிறப்பு வகுப்புகளை நடத்தும் வல்லுநர்கள் ஆசிரியர்களுக்கு மதிப்பூதியம். (மணி ஒன்றுக்கு ரூ.100/- வீதம் 15 மணிநேரம் மாதம் ஒன்றுக்கு). | : | 1500 |
| **சில்லரைச் செலவினங்கள்:** | | |
| எழுது பொருட்கள் வகுப்பில் பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் இதர செலவினங்கள். | : | 550 |
| மொத்தம். | : | 5000 |

24 X 12 (மாதம் ஒன்

ரூ.14.40 லட்சங்கள்.

4) மேலே பத்திகள் 2 மற்றும் 3ல் உள்ள வேலைவாய்ப்பு மற்றும் பயி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு தீவிரமாக பரிசீலனை செய்து அதனை ஏற்றச் செயல்படுத்த கீழ்கண்டவாறு ஆணை வெளியிடுகிறது.-

1) 1999-2000ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள 24 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் இணைப்பில் கண்டவாறு 24 தன்னார்வ பயிலும் மையங்க ( Study Circles ) ஏற்படுத்த ஏற்பளிக்கப்படுகிறது.

2) இத்திட்டத்திற்கு ஆண்டொன்றிற்கு பத்தி 3ல் கண்டுள்ளவாறு செலவிட ரூ.14.40 லட்சங்கள் தொடர் செலவினம் செய்ய ஏற்பளிக்கப்படுகிறது.

3) மேலே பத்தி 4ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட செலவினங்கள் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின்கீழ் செலவிடப்பட வேண்டும்.-

"2230 தொழிலாளர் நலனும் வேலைவாய்ப்பும் - 02 வேலைவாய்ப்பு - 101. வேலைவாய்ப்புப் பணிகள் - 1, திட்டத்தில் சேராதது - ஏஏ. மாவட்ட வேலைவாய்ப்புப் பணியாளர்கள் பயிற்சி."

(டி.பி.கோட்.நெ. 2230-02-101-ஏஏ-7201)

6) இச்செலவு புதுப்பணி ( Nem Services ) குறித்ததாகும். சட்டமன்றத்தின் அனுமதி நாளடைவில் பெறப்படும். சட்டமன்றத்தில் ஒப்புதல் பெறப்படும் வரை, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் இச்செலவு செய்யப்படும். இது குறித்து உரிய ஆணைகள் நிதி (வ.செ.தி.பொது-1) துறையில் பிறப்பிக்கப்படும். 1999-2000ஆம் ஆண்டில் செலவிடத் தகுதியுள்ள தொகைக்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பெற, இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை.5 நிதித் துறைக்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

7) இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.444, கே.எண்.(எல்.கே.எஸ்)98-1, நாள்.20.7.99ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜி.எ.ராஜ்குமார்,
அரசு செயலர்.

பெறுநர்:
இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை.5
மாநிலக் கணக்காயர், சென்னை.18.
மாநிலக் கணக்காயர், சென்னை.18(பெயரில்)
மாநிலக் கணக்காயர், சென்னை.35 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை.5
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை.35
தலைமை தணிக்கை அலுவலர், சென்னை.18
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள் (இயக்குநர் மூலமாக)
நிதி(வ.செ.பொ.1/தொ.ம.வே.வா)துறை, சென்னை.9

நகல்:
1) நே.மு.உ. தொழிலாளர் நல அமைச்சர், சென்னை.9
2) நேர்முக உதவியாளர், செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை.9
3) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு பிரிவு ' ( பிரிவு, சென்னை.9
உபரி / இருப்புக் கோப்பு.

/ உண்மை நகல் /

[signature]
இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்.

தி.தி.18.9.

18/12/20

சுருக்கம்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – வேலைவாய்ப்புப் பிரிவு தன்னார்வப் பயிலும் வட்டங்கள் – பயிற்றுவிப்பு தொடர்பான செலவினங்கள் – 2015–2016–ஆம் நிதியாண்டிற்கான நிதி ஒதுக்கீடு – ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒதுக்கத்திலிருந்து மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்.2) துறை

அரசாணை (டி) எண்.57

நாள்: 25.01.2016
மன்மத, தை –11
திருவள்ளுவர் ஆண்டு 2047

மீண்டும் படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண். 143, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஆர்.1) துறை, நாள். 11.09.2015.

மேலும் படிக்கப்பட்டது:-

2. இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை–32 அவர்களின் கடிதம் எண்.தொ.ஆ/42701/2014, நாள். 20.07.2015, 29.09.2015, 04.11.2015 மற்றும் 16.12.2015.

---

ஆணை:

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் தெரிவித்துள்ள சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, அன்னாரது கருத்துருவினை அரசு பரிசீலனைக்குப்பின் ஏற்று, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் தன்னார்வப் பயிலும் வட்டங்களுக்கு பயிற்றுவித்தல் தொடர்பாக ஆகும் ஒட்டுமொத்தச் செலவினங்களை 2015–2016–ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒதுக்கத்திலிருந்து மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடுகிறது.

2. மேலே பத்தி 1–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2230– தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு–02 வேலைவாய்ப்பு, 101 வேலைவாய்ப்பு பணிகள்–I திட்டத்தில் சேராதது–AA மாவட்ட வேலைவாய்ப்பு பணியாளர்கள்– 72 பயிற்சி.

(த.தொ.கு. 2230–02–101–AA– 7201)"

(த.பி.பா)

3. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.1080/நிதி(தொ.(ம)வே)/2016, நாள். 14.01.2016–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை–32.
மாநில கணக்காயர், (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை)/ (தணிக்கை), சென்னை–18.
சம்மந்தப்பட்ட கருவூல அலுவலர்கள் ( இயக்குநர் மூலமாக)

நகல்:–
நிதி (தொ (ம) வே.வா)த் துறை, சென்னை–9.
செயலரின் தனிச்செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அநமு–2) துறை, சென்னை–9.
கூடுதல் நகல் கோப்புக்கு (கோ.எண்.17926/ஆர்.2/2015)
இருப்புக் கோப்பு/ உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25/1/16

பிரிவு அலுவலர்.

25/1/16